**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் சார்வரி வருடம் தமிழ் மாதம் கார்த்திகை 29–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 டிசம்பர் 14– ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற அவசர கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**கோப்பு எண் : 1130 /2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21ன் கீழ் ரூ.**4.50** கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20557/2020/இ3, 11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| **நகராட்சியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்)** | **சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ.கோடியில்)** | **நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்)** |
|---|---|---|---|
| காங்கயம் | **4.50** | **4.05** | **0.45** |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **சாலையின் நீளம் (கி.மீ)** | **சாலையின் அகலம் (மீ)** | **மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| 1 | காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**3** சென்னிமலை ரோடு மெயின் மற்றும் குறுக்கு வீதிகளில் தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.**1** திரு.வி.க நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதி, வாய்க்கால் மேடு மெயின் வீதிகள், வார்டு எண்.**2** திருவள்ளுவர் வீதி மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், வார்டு எண்.**3** சின்னாய் புதுார் ரோடு, சின்னாய்புதுார் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், திருமலை நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள் , அண்ணாமலை நகர் முதல் மெயின் வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் மற்றும் வார்டு எண்.**2** பட்டேல் மெயின் வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் சிமெண்ட் சாலை சீரமைத்தல். | 4.295 | 3.00, 3.75,4.50 | 150.00 |
| 2 | காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**3** அண்ணாமலை நகர் **2**வது மெயின் வீதியில் | | | 150.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | தார்சாலை அமைத்தல், வார்டு எண்.4 மூர்த்திரெட்டி பாளையம் குறுக்கு வீதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.5 ராஜாஜி வீதி, மஜீத் வீதி, வார்டு எண்.6 அய்யாச்சாமி நகர் காலணி 4வது மெயின் மற்றும் குறுக்கு வீதி, பொதிகை நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், வார்டு எண்.7 கங்கா நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், வார்டு எண்.9 அகிலாண்டபுரம் முதல் முத்தூர் பிரிவு ரோடு வரை, அருள் ஜோதி நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், வார்டு எண்.10 பொன்னி நகர் மெயின் வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் மற்றும் வார்டு எண்.4 முஸ்லீம் வீதி மெயின் மற்றும் குறுக்கு வீதிகளில் சிமெண்ட் சாலை சீரமைத்தல். | 4.640 | 3.00,3.50, 3.75,4.50 | |
| 3 | காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 தாராபுரம் ரோடு குறுக்கு வீதி, பங்களாபுதூர் ரோடு குறுக்கு வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.11 ஆசிரியர் காலணி குறுக்கு வீதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.10 குதிரைப்பள்ளம் ரோடு, வார்டு எண்.14 எல்.ஜி.ஜி.எஸ் காலணி மெயின் மற்றும் குறுக்கு வீதி, காமராஜர் வீதி, வார்டு எண்.15 திருநீலகண்டர் வீதி மற்றும் சுபாஷ் வீதி, வார்டு எண்.16 புதுவிநாயகர் கோவில் குறுக்கு வீதி, வனிதா கல்வி நிலையம் வீதி, வார்டு எண்.18 சௌடாம்பிகை நகர் குறுக்கு வீதிகள் ஆகிய பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் மற்றும் வார்டு எண்.14 மா.பொ.சி வீதியில் சிமெண்ட் சாலை சீரமைத்தல். | 4.625 | 3.50, 3.75,4.50 | 150.00 |
| | **மொத்தம்** | **13.560** | | **450.00** |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1729. நாள்.14.12.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:2**

ந.க.எண்.1447/2020/அ2

2020–2021 ஆம் ஆண்டிற்கான குத்தகைதாரர்களுடைய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகையாக 2016–2017 ஆம் ஆண்டு வரை கொண்டு செல்லப்பட்டுள்ளது. பழைய பேருந்து நிலைய கடை எண் 20எ–க்கு குத்தகைதாரர் திரு.ஜி.சாமிநாதன் தனது விண்ணப்பத்தில் 31.07.2020 உடன் தனது குத்தகை காலம் முடிவடைந்ததால் தான் செலுத்திய வைப்பு தொகையிலிருந்து 2020–2021 ஆம் ஆண்டிற்கு

31.07.2020 வரை செலுத்த வேண்டிய குத்தகை தொகைக்கு ஈடு செய்து கொண்டு மீத தொகை வழங்க கோரியுள்ளார்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | கடை விபரம் | வருடம் | பதிவேடு பக்கம் எண் | பதிவேடு வரிசை எண் | இருப்பில் உள்ள வைப்பு தொகை | கடை வாடகைெ தாழில் வரி மற்றும் அபராத தொகை ஈடு செய்யப்படும் தொகை | திரும்ப வழங்கும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஜி.சாமிநாதன் | பழைய பேருந்து நிலைய கடை எண் 20எ | 2014–2015 | 29<br>29 | 15<br>18 | 238500<br>10000 | 238500<br>10000 | 0<br>0 |

மேற்படி குத்தகைதாரரின் இருப்பில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து செலுத்த வேண்டிய வாடகை தொகை , சேவை வரி மற்றும் தொழில் வரி தொகையினை ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1730. நாள்.14.12.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:3**

**(கோப்பு எண். 1651/ 2019 / எப் 1)**

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம், ரீ.சர்வே எண் 197/2 ல் 1.00 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி திரு. டி. நித்தியானந்தன் த/பெ. தங்கவேல் என்பவரால் 22.11.2019 அன்று மனு செய்ததை இவ்வலுவலக கடிதம் ந.க எண் 1651/2019/எப்1 நாள் 17.12.2019 –ன் வாயிலாக உதவி இயக்குநர் நகர் ஊரமைப்புத்துறை திருப்பூர் அவர்களுக்கு பரிசீலனைக்காக அனுப்பப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1568/2020/தி.ம1 நாள்.09.07.2020 –ல் பொது ஒதுக்கீடு, மின் பகிர்மானத்திற்கான ஒதுக்கீடு மற்றும் சாலை அமைப்பு வரைபடம் அங்கீகாரம் செய்து மேற்படி மனைப்பிரிவு சாலைகளை நிர்வாக அதிகாரியின் ஆலோசனை பெற்று தார்சாலை, வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து தானமாக ஒப்படைப்பு செய்தும், மின் பகிர்மானத்திற்கான ஒதுக்கப்பட்ட இடத்தினை மின்வாரியத்திற்கு தனியாகவோ அல்லது உள்ளாட்சிக்கோ தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்து புகைப்படத்துடனும் உள்ளாட்சி பரிந்துரையுடனும் தானபத்திர நகலுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

காங்கயம் நகராட்சி பணி மேற்பார்வையாளர்(பொ) மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் 19.11.2020 தேதியிட்ட அறிக்கை மற்றும் சான்றில் மேற்படி இடத்தில் அமைக்கப்பட்ட தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் உள்ளது என்றும் மழைநீர் வடிகால் , சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் தெருவிளக்கு

அமைப்பதற்கான மதீப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/– ஆகும் எனவும் தெரிவித்துள்ளனர். மனுதாரர் மேற்படி தொகை ரூ.1,00,000–ஐ காங்கயம் நகராட்சி கரூவூல பற்றுச்சீட்டு எண் 158/03/20–21/0010304 நாள்19.11.2020–ல் நகராட்சியில் செலுத்தியுள்ளார்.

காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 5859/2020 நாள் 30.11.2020 –ல் மேற்படி சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சாலைகள், பொது ஒதுக்கீடு ஆகியவை காங்கயம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 5858/2020 நாள் 30.11.2020–ல் மின்பகிர்மானத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தினை மேற்பார்வை பொறியாளர், பல்லடம் மின்பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கும் தானப்பத்திரம் மூலம் மனைப்பிரிவுதாரர் திரு. டி. நித்தியானந்தன் த/பெ. தங்கவேல் என்பவரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சாலைகள் (மூலைமுடக்கு உட்பட) , பொது ஒதுக்கீட்டிற்கான இடம் மற்றும் மின் பகிர்மானத்திற்காக ஒதுக்கப்பட்ட இடம் ஆகியவற்றை நகர்மன்றத்தின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ளவும் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க வேண்டி உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை திருப்பூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1731 . நாள்.14.12.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)xxxxx
திருமதி.பா.தேவிகா
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி

**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் சார்வரி வருடம் தமிழ் மாதம் மார்கழி 15–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 டிசம்பர் 30– ஆம் தேதி புதன் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**கோப்பு எண்.755/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான பழையப் பேருந்து நிலையக் கடை எண்கள் 10,22 மற்றும் தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண் 19 ஆகிய கடைகளின் குத்தகை காலம் 31.12.2020 உடன் முடிவடைகிறது. எனவே கீழ்கண்ட கடைகளுக்கு நடப்பு குத்தகை தொகையுடன் 15% உயர்வு செய்து குத்தகை காலத்தை 01.01.2021 முதல் 31.12.2023 வரை காலநீட்டிப்பு செய்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பெயர் & கடை எண் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை | 2021–2023 கான மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 1. | திரு.பிரகாஷ் பழையப் பேருந்து நிலையக் கடை எண்.10 | 01.01.2021 முதல் 31.12.2023 வரை | ரூ.9100/– | ரூ.1365/– | ரூ.10465/– |
| 2. | திரு. லோகநாதன் பழையப் பேருந்து நிலையக் கடை எண்.22 | | ரூ.8000/– | ரூ.1200/– | ரூ.9200/– |
| 3. | திரு.அருண்குமார் தினசரி மார்க்கெட் தெற்கு பார்த்த கடை எண் 19 | | ரூ.7000/– | ரூ.1050/– | ரூ.8050/– |

**அலுவலகக்குறிப்பு**

மேற்படி கடையின் அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள 15% உயர்த்தப்பட்ட வாடகை தொகையுடன் கடை உரிமம் புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1732 . நாள்.30.12.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:2**

**(கோப்பு எண். 1740/ 2019/ எப்1, )**

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம், ரீ.சர்வே எண். 22/1H2A1, 22/1H2B, 39/1B -ல் **2.33 1/2** ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி **1.** திரு. கே. எம். தங்கராஜ், த/பெ. கே. முத்துச்சாமி கவுண்டர், **2.** திருமதி. கே. சாவித்திரி, க/பெ. கே. எம். தங்கராஜ்

ஆகியோர் **10.12.2019** அன்று மனு செய்ததை இவ்வலுவலக கடிதம் ந.க எண் **1740/2019/எப்1** நாள் **19.12.2019** –ன் வாயிலாக உதவி இயக்குநர் நகர் ஊரமைப்புத்துறை திருப்பூர் அவர்களுக்கு பரிசீலனைக்காக அனுப்பப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத்துறை திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.**1491/2020**/தி.ம1, நாள்.**04.07.2020** –ல் பொது ஒதுக்கீடு, மின் பகிர்மானத்திற்கான ஒதுக்கீடு மற்றும் சாலை அமைப்பு வரைபடம் அங்கீகாரம் செய்து மேற்படி மனைப்பிரிவு சாலைகளை நிர்வாக அதிகாரியின் ஆலோசனை பெற்று தார்சாலை, வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து தானமாக ஒப்படைப்பு செய்தும், மின் பகிர்மானத்திற்கான ஒதுக்கப்பட்ட இடத்தினை மின்வாரியத்திற்கு தனியாகவோ அல்லது உள்ளாட்சிக்கோ தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்து புகைப்படத்துடனும் உள்ளாட்சி பரிந்துரையுடனும் தானபத்திர நகலுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

காங்கயம் நகராட்சி பணி மேற்பார்வையாளர்(பொ) மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் **12.11.2020**–ன் தேதியிட்ட அறிக்கை மற்றும் சான்றில் மேற்படி இடத்தில் அமைக்கப்பட்ட தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் உள்ளது என்றும் மழைநீர் வடிகால் , சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் தெருவிளக்கு அமைப்பதற்கான மதீப்பீட்டுத் தொகை ரூ.**2,00,000/–** ஆகும் எனவும் தெரிவித்துள்ளனர். மனுதாரர் மேற்படி தொகை ரூ.**2,00,000**–ஐ காங்கயம் நகராட்சி கரூவூல பற்றுச்சீட்டு எண் **158/158/03/20–21/0010138** நாள்.**18.11.2020**–ல் நகராட்சியில் செலுத்தியுள்ளார்.

காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் **6291/2020** நாள் **16.12.2020** –ல் மேற்படி சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சாலைகள், பொது ஒதுக்கீடு ஆகியவற்றை காங்கயம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் **6292/2020** நாள் **16.12.2020**–ல் மின்பகிர்மானத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தினை மேற்பார்வை பொறியாளர், பல்லடம் மின்பகிர்மான வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கும் தானப்பத்திரம் மூலம் மனைப்பிரிவுதாரர்கள் **1.** திரு. கே. எம். தங்கராஜ், த/பெ. கே. முத்துச்சாமி கவுண்டர், **2.** திருமதி. கே. சாவித்திரி, க/பெ. கே. எம். தங்கராஜ் ஆகியோரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சாலைகள் (மூலைமுடக்கு உட்பட) , பொது ஒதுக்கீட்டிற்கான இடம் ஆகியவற்றை நகர்மன்றத்தின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ளவும் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க வேண்டி உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1733. நாள்.30.12.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:3**

**கோப்பு எண் :00018/2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உரக்கிடங்கில் சுமார் **50** ஆண்டுகளாக இருந்த குப்பைகளை பயோ மைனிங் முறையில் தரம் பிரித்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. இதே போல் நகராட்சி எல்லைக்கு வெளியில் வீரணம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட சர்வே எண். **905**ல் உள்ள வருவாய்த்துறைக்கு சொந்தமான பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்னர் நகராட்சி மூலமாக குப்பைகள் கொட்டப்பட்டுள்ளது. **(2003** முதல் **2018** ஆகஸ்ட் மாதம் வரை) இந்த குப்பைகளின் அளவு சுமாராக **15026**$m^3$ இருக்கும். இந்த குப்பைகளை அப்புறப்படுத்தக் கோரி இப்பகுதி பொதுமக்கள் கோரி வருகின்றனர். எனவே, இந்த குப்பைகளையும்

பயோமைனிங் முறையில் தரம் பிரித்து அப்புறப்படுத்த மதிப்பீடு ரூ.120.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், 15 வது நிதிக்குழுவில் விடுவிக்கப்பட்டுள்ள தொகை ரூ.55,27,857/– போக மீதமுள்ள தொகையை மானியமாக வழங்கிடவும், இப்பணிக்கு நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1734. நாள்.30.12.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

ந.க.எண்.756/2016/அ2

2003–2004 முதல் 2014–2015 வரை குத்தகை தாரர்களுடைய வைப்பு தொகை காலங்கடந்தவைப்பு தொகையாககொண்டுசெல்லப்பட்டுள்ளது. ஆடு அடிக்கும் சாலைஇனத்திற்குகுத்தகைதாரர் திரு.அப்துல்சமது தனது விண்ணபத்தில் 2013–2014 ஆம் ஆண்டில்கீழ்கண்டவிபரப்படிதான் செலுத்தியவைப்புதொகை ரூ.50000/– ஐ 2018–2019 ஆம் ஆண்டிற்குசெலுத்தவேண்டியகுத்தகைதொகைக்குஈடு செய்துகொள்ளுமாறுகோரியுள்ளார்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | கடைவிபரம் | வருடம் | பதிவேடுபக்கம் எண் | பதிவேடு வரிசை எண் | இருப்பில் உள்ளவைப்புதொகை | வாடகைக் குஈடு செய்யும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அப்துல்சமது | ஆடு அடிக்கும் சாலை | 2013–2014 | 10 | 1 | 49000 | 49000 |
| | | | | 10 | 2 | 1000 | 1000 |
| மொத்தம் | | | | | | 50000 | 50000 |

மேற்படி குத்தகைதாரரின் இருப்பில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து செலுத்த வேண்டிய வாடகை தொகை மற்றும் சேவைவரி தொகையினை ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1735. நாள்.30.12.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:5**

**கோப்பு எண் : 1270 /2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி **2020–21** ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சியில் சிறுமின் விசைப்பம்பு திட்டங்களை பராமரித்து இயக்க குழாய் திருப்புனர்கள், பம்ப் ஆப்பரேட்டர், ஈப்பு ஓட்டுநர், தொழில்நுட்ப உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தொகை வழங்கும் பணிக்காக **29.12.2020–ல்** நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட +4.90 % அதிகம்
2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட +5.50 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர்.வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1736 . நாள்.30.12.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**கோப்பு எண் : 1139 /2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி **2020–21** ன் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அறையில் டைல்ஸ், கதவுகள் பராமரிப்பு பணிகள் மற்றும் அலுவலக ஜெனரேட்டரில் பராமரிப்பு பணிக்காக **29.12.2020–ல்** நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ்.சுப்பையா மதிப்பீட்டை விட +4.90 % அதிகம்
2. ஆர்.வடிவேல் மதிப்பீட்டை விட +5.80 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1737 . நாள்.30.12.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.
**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண் : 1620 /2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி **2020–21** ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அமராவதி மற்றும் காவேரி குடிநீர் திட்டங்களின் குடிநீர் விநியோகத்தில் குளோரினேசன் செய்ய பயன்படும் ஹைப்போ குளோரைடு திரவம் விநியோகம் செய்யும் பணிக்காக **29.12.2020–ல்** நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. ஸ்ரீ கிருஷ்ணா கெமிக்கல்ஸ் மதிப்பீட்டு விலை விகிதம்
2. கருடா யுடிலிட்டி சல்யூசன்ஸ் மதிப்பீட்டை விட +8.29 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். ஸ்ரீ கிருஷ்ணா கெமிக்கல்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1738 . நாள்.30.12.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:8**

**கோப்பு எண் : 1138 /2020/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2020–21 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் FSTP வளாகத்தை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்காக 29.12.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ்.சுப்பையா — மதிப்பீட்டை விட +4.95 % அதிகம்
2. ஆர்.வடிவேல் — மதிப்பீட்டை விட +6.80 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1739 . நாள்.30.12.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:9**

**கோப்பு எண் : 1621 /2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2020–21 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.1 முதல் 9 வரை சிறுமின்விசைப்பம்பு திட்டம் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு செய்யும் பணிக்காக 29.12.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் — மதிப்பீட்டை விட - 0.10 % குறைவு
2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் — மதிப்பீட்டை விட + 0.50 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட - 0.10 % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1740 . நாள்.30.12.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:10**

**கோப்பு எண் : 1653 /2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2020–21 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.10 முதல் 18 வரை சிறுமின்விசைப்பம்பு திட்டம் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு செய்யும் பணிக்காக 29.12.2020–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட - 0.10 % குறைவு

2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட + 0.25 % அதிகம்

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட - 0.10 % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1741 . நாள்.30.12.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:11**

**கோப்பு எண் : 1355 /2018/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோடு உரக்கிடங்கில் (சர்வே எண். 357) 20KLD கொள்ளளவுள்ள கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Fecal Sludge Treatment Plant) அமைக்கும் பணிக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM 2018-19) ன் கீழ் மதிப்பீடு ரூ.200.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.26888/UGSS-2/2018, நாள். 12.11.2018–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டு உள்ளது. மேற்படி பணி முழுவதும் முடிக்கப்பட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளதால் அதற்கான கழிவுநீர் மேலாண்மை துணை விதிகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்பித்து அனுமதி பெறவும் அனுமதி பெற்றவுடன் தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்திடவும், விளம்பர செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1742 . நாள்.30.12.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:12**

**ந.க.எண்.1644/2020/அ2**

2020–2021 ஆம் ஆண்டிற்கான குத்தகைதாரர்களுடைய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகையாக 2016–2017 ஆம் ஆண்டு வரை கொண்டு செல்லப்பட்டுள்ளது. பழைய பேருந்து நிலைய கடை எண் 27–க்கு குத்தகைதாரர்

திரு.கே.ஹக்கீம் தனது விண்ணப்பத்தில் 30.06.2020 உடன் தனது குத்தகை காலம் முடிவடைந்ததால் தான் செலுத்திய வைப்பு தொகையிலிருந்து 2020–2021 ஆம் ஆண்டிற்கு 30.06.2020 வரை செலுத்த வேண்டிய குத்தகை தொகைக்கு ஈடு செய்து கொள்ள கோரியுள்ளார்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | கடை விபரம் | வருடம் | பதிவேடு பக்கம் எண் | பதிவேடு வரிசை எண் | இருப்பில் உள்ள வைப்பு தொகை | கடை வாடகை தொழில் வரி மற்றும் அபராத தொகை ஈடு செய்யப்படும் தொகை | திரும்ப வழங்கும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திரு.கே.ஹக்கீம் | பழைய பேருந்து நிலைய கடை எண் 27 | 2016–2017 | 44 | 61 | 77968 | 18286 | 0 |

மேற்படி குத்தகைதாரரின் இருப்பில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து செலுத்த வேண்டிய வாடகை தொகை , சேவை வரி மற்றும் தொழில் வரி தொகையினை ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1743 . நாள்.30.12.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:13**

**(கோப்பு எண். 252/ 2020 / எப்1)**

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், காங்கயம் கிராமம், பெருமாள் கோவில் வீதி, கதவு எண் 60 என்ற முகவரியைச் சார்ந்த விஜ௫ (எ) திரிபுரசுந்தரி க/பெ நடராஜன் என்பவர் காங்கயம் கிராமம் பழைய க.ச எண் 1209 (நத்தம் ரீ.ச எண் 445/10) தற்போதைய நத்தம் நிலவரித்திட்ட எண்.1079/26 நெ. காலையில் தனக்கு பாத்தியப்பட்ட பு.ஹெக்டேர் 0.03.25 எர்ஸ் பரப்புள்ள பூமிக்கு பட்டா வழங்க கோரியுள்ளார் எனவும் மேற்படி பூமிக்கு பட்டா வழங்குதல் தொடர்பான காங்கயம் நகராட்சியின் கருத்துருவினை வழங்குமாறு வட்டாட்சியர் காங்கயம் அவர்களின் கடித ந.க எண் 1457/2017/அ6, நாள் 14.02.2019–ல் கேட்டுக்கொண்டதை தொடர்ந்து காங்கயம் நகர்மன்ற தீர்மானம் எண் 1632 நாள் 15.07.2020–ல் மேற்படி இடத்தில் பட்டா வழங்க காங்கயம் நகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தீர்மானம் நிறைவேற்றி வட்டாட்சியர் காங்கயம் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

வட்டாட்சியர் காங்கயம் அவர்களின் கடித ந.க எண் 1457/2017/அ6, நாள்.07.12.2019–ல் நத்தம் ரீ.ச எண் 445/10 என்று தவறுதலாகக் குறிப்பிட்ட படியே நகர்மன்ற தீர்மானத்திலும் ரீ. ச எண் 445/10 என்பதற்கு பதிலாக 445/10 என்று தவறுதலாக குறிப்பிட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், எனவே கவனக் குறைவால் ஏற்பட்ட தவறினைத் திருத்தி பழைய க.ச எண் 1209எம், நத்தம் சர்வே எண் 448/10, நத்தம் நிலவரித் திட்ட சர்வே எண்.

1079/26 என்ற புல எண்ணில் பு.ஹெக்டேர் 0.03.25 (3498 சதுர அடி) பரப்பளவுள்ள இடத்திற்கு பட்டா வழங்க ஆட்சேபனை இல்லை என திருத்திய மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

எனவே பழைய க.ச எண் 1209எம், நத்தம் சர்வே எண் 448/10, நத்தம் நிலவரித் திட்ட சர்வே எண். 1079/26 என்ற புல எண்ணில் பு.ஹெக்டேர் 0.03.25 (3498 சதுர அடி) பரப்பளவுள்ள இடத்திற்கு பட்டா வழங்க காங்கயம் நகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தீர்மானம் நிறைவேற்றி வட்டாட்சியர், காங்கயம் அவர்களுக்கு அனுப்ப நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1744 . நாள்.30.12.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திருமதி.பா.தேவிகா
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி